Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 48

சனிக்கிழமை
13 ஜனவரி 2024

மார்கழி 28
வள்...

முச்சந்தி முரளி



"கடனும் ஏறுது,
விலையும் ஏறுது ,
இதுதான் இலங்கைக்கு
ஏறுமுகமோ?"

க.பொ.த. உ/த

## வினாத்தாள் கசிந்ததால் விவசாயப் பரீட்சை இரத்து!

கொழும்பு, ஜன. 13

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞானப் பாடப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சை கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது. அதன் வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகிவிட்ட தாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. 11

ஓரிரு வாரங்களில்

## எரிபொருள் விலைகள் இலங்கையில் எகிறும்?



கொழும்பு, ஜன. 13

மத்திய கிழக்கில் ஹவுத்தி போராளிகளுக்கும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளுக்கும் இடையிலான மோதலையடுத்து கச்சா எண்ணெய் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. ஓரிரவில் 4 வீத விலையேற்றத்தை கச்சா எண்ணெய் எதிர்கொண்டுள்ளது. இதனால், இலங்கையில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிப்பதற்கு, கூடுதலான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. 11

## முதியவரொருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணம், சட்டநாதர் கோவில் பகுதியில் முதியவரொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார். விஸ்வநாதப்பிள்ளை யோகேந்திரன் (வயது -62) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக 11

அடுத்தகட்ட நிதிக்காக

# அரசாங்கம் - ஐ.எம்.எப் விரைவில் பேச்சுகள்!

கூடுதல் நிபந்தனைகள் வரலாம்

**கொழும்பு, ஜனவரி 13**

**இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான கடன் திட்டம் தொடர்பான அடுத்தகட்டப் பேச்சுகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. வங்கிச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள், ஊழல் ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் அரசதுறையின் வினைத்திறனை அதிகரித்தல் ஆகிய இதன்போது புதிய நிபந்தனைகளாக நாணய நிதியத்தால் விதிக்கப்படலாம்.** 11

## எம்.பி. யானார் நயன பிரியங்கர



கொழும்பு, ஜன. 13

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான நயன பிரியங்கர வாசலதிலக நாடாளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பதவியேற்றுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட 11

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்: எதிர்த்து நீதிமன்றில் வழக்கு

கொழும்பு, ஜன. 13

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை சவாலுக்குட்படுத்தி, உயர் நீதிமன்றத்தில் ஜே.வி.பி.யால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. 11

## இந்திய இழுவைப்படகுகளால் பல வலைகள் அறுத்தழிப்பு!

வடமராட்சி மீனவர்களுக்கு பல இலட்சம் ரூபா இழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

இந்திய இழுவைப் படகுகளால் வடமராட்சியில் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுத்தழிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, இன்பருட்டி, சுப்பர்மடம், சக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களின் வலைகளே இவ்வாறு அறுத்தழிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அழிக்கப்பட்ட வலைகளின் பெறுமதி சுமார் 80 இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைய நாள்களில் வடமராட்சி கடற்பரப்புக்குள் அத்துமீறிய வகையில் இந்திய இழுவைப் படகுகள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. 11

## ஜெனிற்றாவுக்கு பிணை!

வவுனியா, ஜன. 13

ஜனாதிபதி ரணிலின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி ஜெனிற்றா நேற்றையதினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 4ஆம் திகதி வடக்குக்குச் 11

## யாழ்ப்பாண இளைஞர் லண்டனில் படுகொலை

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணம், காரைநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், லண்டனில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்களாக நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம)

## 12 தமிழக மீனவர்களுக்கு நிபந்தனையுடன் பிணை!

யாழ்ப்பாணம், ஜன. 13

பருத்தித்துறை கடற்பரப்பில் கைதான 12 தமிழக மீனவர்களும் நிபந்தனைகளின் அடிப்படையில் பருத்தித்துறை நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி கைது செய்யப் 11




## கசிப்புச் சூத்திரதாரிகள் நால்வர் கோப்பாய் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜன. 13

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கசிப்புச் சூத்திரதாரிகள் நால்வர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனோவின் கூட்டணி சஜித்துடன் சங்கமம்

கொழும்பு, ஜன. 13

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையும் புதிய கூட்டணியில் இணையவுள்ளது.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி என்பன முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

அதேவேளை தற்போது ஆளுங்கட்சியில் பங்காளியாக இருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் அமையும் கூட்டணியில் இணையவுள்ளது. (ச-44)

## கடந்த ஆண்டில்
# யாழ். போதனாவில் 2,83,407 பேர் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன. 13

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 2023ஆம் ஆண்டில் மட்டும் 2 இலட்சத்து 83 ஆயிரத்து 407 பேர் வரையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று மருத்துவமனை புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன.**

மருத்துவமனை விடுதிகளில் தங்கி நின்று ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 166 பேரும் வெளிநோயாளர் பிரிவில் ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 241 பேரும் இவ்வாறு சிகிச்சை பெற்றனர். காய்ச்சல், தடிமன், தலையிடி, சளி மற்றும் இதர நோய்களால் பாதிக்கப்பட்ட கூடுதலானோரும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர்.

அதனைவிட கடந்த ஆண்டு இறுதியில் டெங்கால் பாதிக்கப்பட்டவர்களும் மருத்துவமனை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## டெங்கு நுளம்புப் பரவல் தடுப்பது எம்கைகளிலே!

### பொதுசுகாதாரப் பரிசோதகர் ஆ. ஜென்சன் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 13

நுளம்பு பெருகும் இடங்களை அழித்து டெங்கு அபாயத்திலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பது மக்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். இதனூடாகவே நாம் டெங்கின் பிடியிலிருந்து விடுபடமுடியும் - இவ்வாறு பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வில் பூநகரி பிரதேச மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ. ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு தேவையற்ற நீர்தேங்கும் கொள்கலன்களை அகற்றுவதுடன் சுற்றுப்புறச் சூழல்களை துப்புரவாகப் பேணவேண்டும். காய்ச்சல் அறிகுறிகள் ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சைபெற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். (ச-9)

## மாட்டின் தலையுடன் மாட்டிய இளைஞர்

யாழ்ப்பாணம், ஜன. 13

கீரிமலையில் மாட்டின் தலையுடன் இளைஞர் ஒருவரை நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளோம் - இவ்வாறு காங்கேசன்துறை பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

ஒருசிலர் மாடு ஒன்றை இறைச்சியாக்குவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மாட்டின் தலையை கையில் வைத்திருந்த ஒருவரைக் கைது செய்தனர்.

இதனையடுத்து குறித்த நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-125)

## தமிழ்மக்கள் மீது வஞ்சிப்பு மாணவர் ஒன்றியம் கண்டிப்பு

அறவழியில் போராடுவோரை அராஜக முறையில் அடக்கி கைதுசெய்வதினூடாக ஜனநாயகப் படுகொலைகள் நிகழ்த்தப்படுகின்றன. இதனை அப்பட்டமான ஜனநாயக உரிமை மீறலாகப் பதிவுசெய்கின்றோம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

கடந்தவாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு வருகை தந்தபோது அறவழியில் போராடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா, கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அனைத்துலகச் சமூகத்தின் முன்னால் ஜனநாயக உரிமைகள் வழங்கப்படுவதாக ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு, அறவழியில் போராடிய மக்களின் உரிமையை கிஞ்சித்தும் பொருட்படுத்தாது கைதுகள், விசாரணைகள் மூலமாக அடக்கியொடுக்குவதற்கு முயலும் இந்த அரசாங்கத்தின் போக்கு உலக அரங்கின் முன்னால் வெட்ட வெளிச்சமாக்கப்படவேண்டும்.

காணாமலாக்கப்பட்டோருக்கான நியாயமானதும் நீதியானதுமான பதிலொன்றைக் கூறுவதற்கு இயலாத அரசு, அவற்றுக்கான பதில் கோரிப் போராடும் உறவுகளை நசுக்குவதுடன் பரிகாரநீதியையும் மறுத்து வருகின்றது.

இதுபோன்ற அப்பட்டமான ஜனநாயக மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் இலங்கை அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசும் செயல்களில் ஈடுபடாமல், உளச்சுத்தியுடன் நல்லிணக்கத்தை எட்டவேண்டும்.

தமிழ் மக்களை ஏரவஞ்சனையுடன் வஞ்சித்துவிட்டு நாட்டை முன்னேற்றுவது பயனற்றது - என்றுள்ளது. (ச-27)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வரலாறுகளில் இரத்தக்கறை!

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 13

பயங்கரவாதச் சட்டத்தின் வரலாறுகள் இரத்தக் கறை படிந்தவை என்பதால் இதுகுறித்த ஆழமான விவாதங்கள் அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 3 இலட்சத்துக்கும் மேலாக தமிழ் இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளார்கள். எனவே பயங்கரவாதச் சட்டத்தில் சிறுசிறு மாற்றங்களைச் செய்யாது முழுமையான மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## வெளிச்சக்கூட்டுப் போட்டி

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாதகல் விநாயகர் விளையாட்டுக்கழக அமரர் அருட்சுப்பிரமணியம் நினைவாக பிரான்ஸ் மாதகல் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையில் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான வெளிச்சக்கூட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பெறுமதிமிக்க பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்றும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-66)

## இலங்கைக் கடற்பரப்பை ஆக்கிரமிக்கும் இந்திய மீனவர்

### அமைச்சர் அசண்டையீனம் பலாலி மீனவர் காட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 13

இலங்கைக் கடற்பரப்பின் கரையிலிருந்து 4 கிலோமீற்றர் தூரத்தில் 100 க்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடி படகுகள் எமது கடலை ஆக்கிரமித்து மீன்பிடியில் ஈடுபடுகின்றன. ஆனால், அதனை உரியவர்கள் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பலாலி வடக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பலாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களைக் கைது செய்யுமாறு இலங்கைக் கடற்படையினரிடம் கோரிய போதும், அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதுதொடர்பில் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயற்சித்தபோதும் அவர் பதிலளிக்கவில்லை என மீனவர்கள் குற்றச்சாட்டு முன்வைத்தனர். (ச-23)

## முன்பள்ளி மாணவருக்கு காலை உணவுத்திட்டம்!

கொழும்பு, ஜன. 13

நாட்டின் அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு வழங்கும் வேலைத்திட்டம் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படும் என்று மகளிர், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் பெருமளவான மாணவர்கள் போஷாக்கு குறைபாட்டுக்கு ஆளாகியுள்ள நிலையில் புரதம் நிறைந்த போஷாக்கான உணவைவழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் இந்தத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

தற்போது மாணவர் ஒருவருக்காக ஒதுக்கப்படும் தொகையை 60 ரூபா முதல் 100 ரூபா வரையில் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேபோல் கர்ப்பிணித் தாய்மாருக்கான போஷாக்குப் பொதிகளை 10 மாதங்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்தியவங்கி ஆளுநர் மீது நம்பிக்கை இழந்துவிட்டோம்!

## லக்ஷ்மன் கிரியெல்ல காட்டம்

கொழும்பு, ஜன. 13

**நாட்டின் நிதிநிலைமை குறித்து மத்திய வங்கியின் ஆளுநர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை. உண்மையை மூடி மறைத்தார். ஆகவே அவர்மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாடு வங்குரோத்தடைந்துள்ளது என்று மத்திய வங்கி ஆளுநர் ஒருபோதும் இந்த நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. நாட்டின் நிதி நிலைமையின் உண்மையை அவர் மூடி மறைத்தார். எனவே அவ்வாறான மத்திய வங்கி ஆளுநர் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை" - என்றும் அவர் தெரிவித்தார். (ம)

நாவாந்துறையில்

## 41 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல்!

யாழ்ப்பாணம், ஜன. 13

தேசிய டெங்கு வாரத்தை முன்னிட்டு நாவாந்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற நுளம்புக் கட்டுப்பாடு நடவடிக்கையின்போது 41 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

நாவாந்துறையில் ஜே/85, 87, 84, 83 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 370 வீடுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதில் 214 குடியிருப்புகள் போதிய துப்புரவு வசதியின்றிக் காணப்பட்ட நிலையில் அவற்றில் 41 வீடுகளுக்கு சிவப்பு அறிவித்தலும் 12 குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)



## கப்டன் பண்டிதர் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 13

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான தளபதிகளில் ஒருவரான கப்டன் பண்டிதர் என அழைக்கப்படும் சின்னத்துரை ரவீந்திரனின் 39ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு யாழ். வடமராட்சி வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ். மாநகரசபையின் முன்னாள் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ்.மாநகரசபை முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் மற்றும் பண்டிதரின் குடும்ப உறவுகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-66-125)

## குப்பைகள் நிரம்பலால் நிலத்தடி நீர் மாசுபாடு!

துன்னாலை வல்லிபுரத்திலுள்ள கியான்காடு இந்து மயானத்துக்கு அண்மையாக வீதியோரத்தில் கழிவுகள் அதிகளவில் கொட்டப்படுவதால் நிலத்தடி நீர் மாசுபடக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேசசபை மற்றும் பருத்தித்துறை நகரசபை ஆகியவையும் இந்த இடத்தில் கழிவுகளை கொட்டி வருகின்றன. அதனால் பொதுமக்களும் அவ்விடத்திலேயே கழிவுகளைக் கொட்டுகின்றனர்.

இதனால் பிரதேசத்தின் நிலத்தடி நீர் மாசுபடக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே இந்த இடத்தில் கழிவுகள் கொட்டப்படுவதை தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-20)

## ஜனநாயகக் குரலை ஒடுக்குதல் மிலேச்சத்தன உரிமை மறுப்பு

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு காட்டம்

வவுனியா வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி மனிதநேயமற்ற முறையில் பலவந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ளார். இது மோசமானதொரு உரிமை மறுப்பாகும் - இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகச் செயற்பட்டு வரும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கண்டித்துள்ளது. இதுதொடர்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

கடந்தவாரம் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு வந்தபோது, காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஜனாதிபதியை நேரில் சந்தித்து, 'ஒப்படைக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது?' என்பதற்கான பதிலை வழங்குமாறு கோரிக்கை விடுப்பதற்குச் சென்றிருந்தனர். இதன்போது நீதி கோரி குரலுயர்த்திய, வவுனியா வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி சி.ஜெனிற்றா பொலிஸாரால் அடக்கி ஒடுக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளார். இது மோசமானதொரு உரிமை மறுப்பாகும். அரசாங்கம் உண்மையான நல்லிணக்கத்தை உறுதிசெய்யவேண்டும்- என்றுள்ளது. (ச-100)

## போராட்டம் முடிவு!

கொழும்பு, ஜன. 13

சுகாதாரசேவையின் தொழிற்சங்கங்கள் சில ஒன்றிணைந்து நடத்திய பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்றுக்காலை 6 மணியுடன் முடிவுக்கு வந்தது.

மருத்துவர்களுக்கு வழங்கப்படவுள்ள 35,000 ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி கடந்த 2 தினங்களாகக் குறித்த போராட்டத்தை சுகாதார சேவைப் பணியாளர்கள் முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-இ)

## திருவாசக முற்றோதல்

கொடிகாமம் ஜன 13

குப்பிளான் சிவபூமி ஆச்சிரமத்தில் இன்று சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் சைவ மெய்யடியார்களின் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (அ-159)

## பதினம் தெரியுமோ?

இப்பவெல்லாம் பயிரை ஆடு, மாடுகள் மேயிறதை விடவும் வேலியளே மேயிறதுதான் கூடவா இருக்கு. அச்சுவேலியில கிட்டடியில 10 பவுண் நகை களவுபோட்டுது. வீட்டுக்காரர் நகை களவுபோட்டுதெண்டு அச்சுவேலிப் பொலிஸில முறைப்பாடு செய்ய, உடனேயே பொலிஸ்காரர் களத்தில இறங்கிட்டினம். நாடு முழுக்க கள்ளர், காடையர், போதைப்பொருள்காரர் எண்டு எல்லாரையும் பிடிக்க 'ஒப்பிரேசன் யுக்திய' எண்ட பேரில பொலிஸ்காரர் அங்கையும் இஞ்சையுமெண்டு ஓடித்திரியேக்க , இந்த நகைக்கள்ளரை எப்பிடிச் சும்மாவிட ஏலும்? எப்பிடியோ தோண்டித் துருவி விசாரிச்சு, நகைக்கள்ளரை அடுத்தநாளே பொலிஸ் பிடிச்சும் போட்டுது. அந்தளவுக்கு கடும் வேகம். அதேவேகத்தில பிடிபட்ட கள்ளரிட்ட விசாரிக்க வேண்டிய முறையில விசாரிச்சு, களவெடுத்த நகையள் எங்கை இருக்கெண்டும் கண்டுபிடிச்சு, முழுநகையையும் மீட்டு நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைச்சும் போட்டினம்.

இந்தளவுக்கும் ஓகேதான். ஆனால் அதுக்குப் பிறகுதான் ஒரு விசயம் வெளியில தெரிய வந்திருக்கு. களவுபோன 10 பவுண் நகையில, நீதிமன்ற நடவடிக்கைக்காக கிட்டத்தட்ட 7 பவுண் நகையைத்தான் பொலிஸ்காரர் குடுத்திருக்கினம். ஆனால் அவையின்ர அறிக்கையில களவுபோன முழுநகையளையும் மீட்டாச்சு எண்டும், அவ்வளவத்தையும் கோர்ட்ஸில பாரப்படுத்தியாச்சு எண்டும் எழுதியிருக்கினம். இது நகையைக் களவு குடுத்தவைக்குத் தெரிய வந்தவுடன, பொலிஸ் ஸ்ரேசனிலபோய் "மிச்சம் 3 பவுண் நகையை நீங்கள் கள்ளரிட்ட இருந்து எடுக்கேலையோ? ஒரு கைச்சங்கிலியும்,. ஒரு சோடி காப்பும் நீங்கள் கோர்ட்ஸில குடுத்த நகைக்குள்ள இல்லை. அதை நீங்கள் மடக்கிப் போட்டிங்களோ?"எண்டு கேட்டிருக்கினம். பொலிஸ்காரரோ 'களவுபோன நகையை முழுசா மீட்டு கோர்ட்ஸுக்குக் குடுத்திட்டம்' எண்டு பிடிச்ச பிடியில நிண்டிருக்கினம். "அப்பிடியெண்டால் நாங்கள் இதை மேல்மட்டத்துக்கு கொண்டு போகப்போறம்" எண்டு களவு குடுத்தவை சொல்லிப்போட்டு வந்திருக்கினம்.

அடுத்தநாள் அச்சுவேலிப்பொலிஸ்காரர் அந்த வீட்டுக்காரரை வரச்சொல்லிக் கூப்பிட்டு "இந்தாங்கோ, இதைக் கோர்ட்ஸில ஒப்படைக்க மறந்திட்டம்" எண்டு காதும் காதும் வைச்சமாதிரி ஒரு சோடி காப்பைக் குடுத்துச் சமாளிக்கப் பாத்திருக்கினம். வீட்டுக்காரரும் வேறவழியில்லாமல் அதைவாங்கிக் கொண்டு வந்திட்டினமாம். ஆனால் இன்னமும் அந்தக் கைச்சங்கிலிக்கு என்ன நடந்தது எண்டு தெரியேலை. ஒருவேளை, அச்சுவேலிப் பொலிஸ் ஸ்ரேசனில உள்ள சப். இன்ஸ்பெக்டருக்கு தெரிஞ்சிருக்குமோ என்னவோ. "இப்பத்தைக் காலத்தில கள்ளரைக் கூட நம்பலாம் ஆனால் பொலிஸை நம்பேலாது"எண்டு அங்கத்தைச் சனம் கதைக்குது. ஆரைத்தான் நம்புவதோ அச்சுவேலி நெஞ்சம்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயான எரிகொட்டகை அமைக்க நன்கொடை

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ். கோப்பாய், கந்தன்காடு இந்துமயானத்தில் எரிகொட்டகை அமைப்பதற்கு வலி. கிழக்குப் பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும், கந்தன்காடு இந்துமயான அபிவிருத்திச்சபையின் தலைவருமான சு. தயாளன் நடேஸ்வரன் 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவை நன்கொடையளித்துள்ளார்.

அத்துடன் கந்தன்காடு காலவைரவர் ஆலய புனருத்தாரணத்துக்கும் ஒரு இலட்சம் ரூபா வழங்கினார். (ச-20)



# பாலங்குளத்தை சீரமைத்து தருக

முல்லைத்தீவு, ஜன. 13

விவசாய நீர்ப்பாசனத்துக்கு ஏற்றவகையில் முல்லைத்தீவு, துணுக்காய் பாலங்குளத்தை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். துணுக்காயின் ஆரோக்கியபுரத்திலுள்ள இந்தக் குளத்தின்கீழ் 60 ஏக்கர்வரையான நிலப்பரப்பிலேயே தற்போது பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் குளம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டால் 200 ஏக்கர் வரையான நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் செய்ய முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-13)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனக்கசப்புகள் நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். நண்பர்கள் வகையில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. விநாயகரை வழிபடுவது நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். அனுகூலம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும் நாள். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**சிம்மம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். யோகா தியானத்தில் மனம் லயிக்கும். புதிய பாதை தெரியும் நாள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். இலாபம் அடைவீர்கள். வாகனங்களைச் சரி செய்வீர்கள். உழைப்பால் உயரும் நாள். வழிபடத் தடைகள் விலகும். இழப்புகளைச் சரி செய்வீர்கள். நிம்மதி உண்டாகும். உற்சாகமான நாள்.

**துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் இலாபம் சம்பாதிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**விருச்சிகம்:** மனஉளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

**தனுசு:** சோர்வு, களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மகரம்:** எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களால் பிரச்சினைகள் வந்து செல்லும். அதிகம் உழைக்க வேண்டிய நாள். பொறுமையாக இருப்பது அவசியம்.

**கும்பம்:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். பெற்றோரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்னுரிமை கிடைக்கும். மரியாதை கூடும் நாள்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். முயற்சியில் வெற்றிபெறும்.

# தமிழ் மக்கள் கூட்டணி கில்மிஷாவுக்குப் பாராட்டு



யாழ்ப்பாணம், ஜன. 13

தென்னிந்தியத் தொலைக்காட்சி நடத்திய 'ஸரிகமப' நிகழ்ச்சியில் வெற்றிவாகை சூடி எமது மண்ணுக்கு பெருமை சேர்த்த 'ஈழத்துக் குயில்' கில்மிஷாவை தமிழ் மக்கள் கூட்டணி மதிப்பளித்தது. தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் ஆகியோர் கில்மிஷாவின் இல்லத்துக்கு நேரடியாகச் சென்று கில்மிஷாவை பாராட்டிக் கௌரவித்தனர். (ச-66-125)


## 31 ஆம் நாள் ஆத்மசாந்தி நிகழ்வும் நன்றி நவிலலும்




### அமரர் மயில்வாகனம் மகாராசா (மது)

அன்னாரின் இத்துயரமான காலகட்டத்திலும் இறுதிக் கிரியைகளிலும் எமது ஆறாத துயரத்திலும் எமது துன்பத்தை தங்களின் துன்பமாக சுமந்து பல்வேறு வகைகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அத்தனை நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
076 6688244

'கந்தன் அருள்'
இருபாலை வீதி, இருபாலை,
கோப்பாய்.


# சொற்பொழிவு

சுன்னாகம், மயிலணி திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சிறப்புச்சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சைவப்புலவர்கள் கந்த சத்தியதாசன், செ.த.குமரன், கா.கமலநாதன், பொன். சந்திரவேல் மற்றும் இளஞ்சைவப்புலவர்கள் நித்திய பாபுதரன், க.கைலநாதன், ச.நவநீதன், க.கயிலைவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளனர். (ச)

# கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், ஜன. 13

அச்சுவேலி - புத்தூர் சந்தியில் கசிப்புடன் இரு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதானோரில் ஒருவரிடம் இருந்து 1500 மில்லிலீற்றர் கசிப்பினையும், மற்றையவரிடம் 325 மில்லிலீற்றர் கசிப்பினையும் பொலிஸார் கைப்பற்றினர். இதனையடுத்து குறித்த இருவருக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போட்டியும் அழிவும்

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நிலவிய உட்கட்சிப்பூசல் 'தலைவர் தெரிவு' என்னும் விடயத்தால் பொதுவெளிக்கு வந்துவிட்டது. சிறீதரன்அணி, சுமந்திரன் அணி, மாவைஅணி, நடுநிலைஅணி என்று ஏகப்பட்ட அணிகள் ஒரு கட்சிக்குள்ளேயே இருந்து அல்லாடுவதையும், சமூகவலைத்தளங்களில் வசைமாரி பொழிவதையும் தமிழ்மக்கள் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மோதல்களையும், முரண்பாடுகளையும் தனியே ஒருகட்சியின் பிரச்சினையாகத் தமிழ்மக்கள் கடந்து செல்லமுடியாத நிலையை காலம் உருவாக்கி விட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளால், தமிழ் மக்களின் உரிமைக்கான அரசியல் பயணத்துக்கென உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு. இதில் பல தமிழ்க்கட்சிகள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், தமிழரசுக் கட்சி என்ற அச்சாணியை மையமாகக்கொண்டே கூட்டமைப்பு கட்டமைக்கப்பட்டிருந்தது. அதனால்தான் ஆனந்தசங்கரியின் விலகலோடு, தமிழரசுக்கட்சியின் வீட்டுச்சின்னத்தை கூட்டமைப்பு தனதாக்கிக் கொண்டது. தமிழ் மக்களின் மனதில் வீட்டுச்சின்னம் விடுதலையின் சின்னமாக மாறியது. வீட்டுக்குப் போடும் வாக்குகளெல்லாம் தமது விடிவுக்கானது என்று அவர்களும் நம்பினர். புலிகள் இருக்கும் வரையில் நிலைமை அப்படித்தான் இருந்தது. ஆனால், உடையவன் இல்லாவிட்டால் ஒருமுழம்கட்டை என்பதைப்போல, புலிகளின் காலத்துக்குப்பிறகு கூட்டமைப்பின் நடவடிக்கையில் பெரும்மாற்றங்கள் உண்டாயின. திட்டமிட்ட புலிநீக்க அரசியலும், தமிழ்த் தேசிய விரோதப் போக்கும் கூட்டமைப்புக்குள்ளும், அதன் அச்சாணியான தமிழரசுக் கட்சிக்குள்ளும் மேலெழத் தொடங்கின. கூட்டமைப்பில் இருந்து ஒவ்வொரு கட்சியாக விலகத் தொடங்கின அல்லது விலகும்முடிவினைஎடுக்கவேண்டிய சூழலுக்குள் தமிழரசுக் கட்சியின் போக்கால் உதிரிக் கட்சிகள் தள்ளப்பட்டன. இப்போது எல்லாக் கட்சிகளும் விலகிவிட, தமிழரசுக் கட்சியும் வீட்டுச் சின்னமும் மட்டும் தனித்து நிற்கின்றன. கூடவே கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாக தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கியும் அவரோகணமாக வீழ்ந்து கிடக்கிறது.

இத்தகைய இக்கட்டானநிலையில்தான் கட்சியின் புதிய தலைவராக வருவதற்கு மும்முனைப் போட்டி உருவானது. உண்மையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான சீ.யோகேஸ்வரன், இந்தத் தெரிவுக்கு தன் பெயரையும் சமர்ப்பித்திருந்தாலும், அவர் தேர்தலுக்கு முன்னர் போட்டியில் இருந்து ஒதுங்கிக்கொள்ளவே அதிக சந்தர்ப்பங்கள் உண்டு. இதனால் சிறீதரன் - சுமந்திரன் இடையேதான் அடுத்த தலைவர் யார் என்பதில் பலப்பரீட்சை ஏற்பட்டுள்ளது. இருவருமே வெவ்வேறான குணவியல்புகளையும், கொள்கைகளையும் கொண்டவர்கள். அதனால் அவர்களின் ஆதரவாளர்களும் அதே நிலைப்பட்டு - பிளவுண்டு இப்போது சமூக வலைத்தளங்களிலும் மாறிமாறி வசைபாடல்களை ஆரம்பித்து விட்டனர். இந்த வசைபாடல்கள் தலைவர் தெரிவுக்குப் பின்னர் இன்னும் வலுப்பெறும் அபாயமுண்டு. பங்காளிக் கட்சிகளால் கைவிடப்பட்டு தனிமரமாகியுள்ள தமிழரசுக் கட்சி இந்தத் தலைவர் தெரிவால் தனக்குள் இன்னும் சில கூறுகளாகப் பிளவடையும் வாய்ப்புகளே அதிகம். என்னதான் வெளிப்பார்வைக்கு புன்னகைகளால் சந்தித்துக்கொண்டாலும், தேர்தலுக்குப் பின்னர் இரு தரப்பினரும் மற்றைய தரப்பின் காலை வாருவதிலும், தம்முடைய செல்வாக்கை அதிகரிப்பதிலுமே கவனத்தைச் செலுத்துவர். இது நிரந்தரமான பிளவுக்கும் வழி கோலிவிடும். இத்தகைய பிளவுகள், தமிழரசுக் கட்சி மீதான நம்பிக்கையீனத்தையும், வெறுப்பையும் மக்களிடம் உண்டுபண்ணி, இப்போதிருக்கும் வாக்கு வங்கியைக்கூட இல்லாதாக்கிவிடும். ஒரு இனத்தின் அரசியல் அடையாளமாக விளங்கிய, தந்தை செல்வாவின் உயிர் மூச்சில் உருவான கட்சி இப்படி ஒரு தலைமைத்துவப் போட்டியால் கண்முன்னே அழிவடைவதைக் காணவேண்டுமென்பதுதான் தமிழ் மக்களின் விதியோ...?



# மக்கள் திண்டாட்டத்தில்; அரசோ கொண்டாட்டத்தில்!

## எதிர்க்கட்சித் தலைவர் சீற்றம்

**கொழும்பு, ஜன. 13**

**வரிச்சுமையால் வாழ வழியின்றி மக்கள் திண்டாடும் நிலையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நடுக்கடலில் விருந்துபசாரம் நடத்தி - பணத்தை வீணடித்து கொண்டாடி மகிழ்கின்றனர். இந்தக் கொண்டாட்டம் தேவைதானா?**

- இவ்வாறு நாடாளுமன்றில் கேள்வியெழுப்பினார் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ.

ஜனவரி மாதம் பாடசாலை மாணவர்களுக்கான பேருந்து பயணச் சிட்டை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. வற்வரி விதிப்பால் மக்கள் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தநிலையில் ஆளுங்கட்சி அமைச்சர்கள் குழுவொன்று துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான இரு கப்பல்களைப் பயன்படுத்தி, நடுக்கடலுக்குச் சென்று விருந்துபசாரக் கொண்டாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலையில் இத்தகைய கொண்டாட்டம் தேவைதானா? - என்றார். (ச-44)

## பன்றி நெல் தாக்கம் இடரில் விவசாயிகள்

கிளிநொச்சி, ஜன. 13

கிளிநொச்சியின் பல பகுதிகளில் பன்றிநெல்லின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால், தாம் நெருக்கடிக்குமுகம்கொடுத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை போன்றபகுதிகளிலேயே பன்றி நெல்லின் தாக்கம் கூடுதலாக அவதானிக்கப்பட்டுள்ளது எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ச-113)

## தற்புகழ் தேடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

### ஆளுங்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 13

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் புகழ் பெறும் நோக்கில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார் - என்று நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சரான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

"முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்டோரைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார். ஆனால், அவர், புலிகளுக்கு ஆயுதம் கொடுத்த தனது தந்தையைப் பற்றியும் பேச வேண்டும்'' என்றும் அவர் தெரிவித்தார். (ச-44)

## 'ட்ரோன்' உதவியுடன் நெற்செய்கை



'ட்ரோன்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முதன்முறையாக இந்த வருடம் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ட்ரோன்கள் விவசாயச் செய்கையில் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கவும், நெல் விதைக்கவும், நெற்பயிர்களை அளக்கவும், நோய்களைக் கண்டறியவும் பயன்படுத்தப்படவுள்ளன. (ச-இ)

## கோணாவிலில் குற்றங்கள் அதிகரிப்பு

கிளிநொச்சி, ஜன. 13

கிளிநொச்சி, கோணாவில் கிராமத்தில் கசிப்புக் காய்ச்சுவது உள்ளிட்ட குற்றச்செயல்கள் தலை தூக்கியுள்ளன. இதனால் குடும்ப வன்முறைகளும் அதிகரித்துள்ளன என்று கிராம பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. எனவே பொலிஸார் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-13)

### நாளை

14.01.2024

ஞாயிற்றுக்கிழமை

மார்கழி 29

சுபநேரம் : 09.34 - 11.04

ராகுகாலம் : 05.04 - 06.34

சதுர்த்தி விரதம்


### நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொரு மனிதனும் அவனுக்கான
தனிப்பட்ட சொத்து.
இதில் அவனைத் தவிர
வேறு யாருக்கும் உரிமை இல்லை.

- ஜோன் லாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## தம்பையா தம்பித்துரை

(தம்பையா அருள்நேசன் தம்பித்துரை - சமாதான நீதவான்)

யாழ். மத்திய நிலைய ஸ்ரீஞானவைரவர் ஆலய அறங்காவலர் உரிமையாளர்.

தோற்றம்
26.12.1930

மறைவு
14.12.2023


உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நினைவுகளுடன் என்றும்

மைத்துனர் - ச.இராஜகுமாரன்
மருமக்கள் - கு. சந்திரவதினி, க. இந்துமதி
இ.ஸ்ரீதர், இ.றஞ்சிற், இ.சுதர்ஷண்
பேரப்பிள்ளைகள் - கு.குபேசறாஜ், கு.சசிறாஜ்,
கு.ஜிவேநித்யா, க.ஜெஷ்மிகன்,
ற.அஷ்மிதா, ற.டனுஷ்கா,
ற.கனுஷ்கன், ஸ்ரீ.டென்ஷிகன்,
சு.டனன்ஷிகா, சு.யுஹற்னிக்கா,
சு.பெனுஷிகன்.

# மரண அறிவித்தல்

## நல்லையா கமலாதேவி



தோற்றம்:
18.10.1940

மறைவு:
10.01.2024

கோண்டாவில் மேற்கு உப்புமடத்தினை பிறப்பிடமாகவும், அளவெட்டி மற்றும் கோண்டாவில் மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா கமலாதேவி கடந்த (10.01.2024) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் சின்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற வேலாயுதம் நல்லையாவின் பாசமிகு மனைவியும், கணேசபிள்ளை, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயதேவி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ராஜ்குமார் (கனடா), விஜயகுமார் (ஜேர்மனி), சர்மினி (பிரான்ஸ்), முகுந்தன் (லண்டன்), சயானி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேலணை) ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜிதா (அவுஸ்திரேலியா), சுதர்சன் (நெதர்லாந்து), சுதாகரன் (லண்டன்), சுபேசன், அமுதினி (அமெரிக்கா), கோபிகா (கனடா) மற்றும் பிரபாஜினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், சரண்ராஜ், சறோண்ராஜ், கிசோண்ராஜ், தண்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்றும் நாளையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன் ராஜ் (ராசன்-கனடா) +1647-807-3556
பெறாமகன் சுபேசன் (கோண்டாவில்) +9477 361 4638
பெறாமகன் பிரபு (கொழும்பு) +9477 741 0696

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
உப்புமடம்

(CS 53501) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

பீடாதிபதி

## கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின்

# மணிவிழா சிறப்புமலர்



## Congratulatory Message

Mrs.B.G.I.Kalani Hemalie
Chef Commissioner, Teacher Education branch,Ministry of Education, Battaramullai.

Unique and memorable happy retirement wishes for Dr.S.Paramanathanthe President of Jaffna National College of Education. You have been a great asset to the field of Teacher Education. With Your retirement will miss you very much not only for the Jaffna NCOE but also to the extra filed of education. You have rendered an ardent service purially as the president of Jaffna national College of Education. During the last five years you moulded the prospective teachers, specially with discipline, dedication and duty conscious great effort has been taken to provide first hand experience needed for teachers by providing a role model with a great well balanced personality as a lecturers, as a vice president and as the president of Jaffna National College of Education for the long years.

Yes have had a very positive and healthy relation ship with ministry of Education which was very useful to run the college harmoniously and have guided your followers towards the correct path by setting a good leadership the way you work with your colleeques was highly supported to ran the process in very smooth and effective manner.

Your Management skills are appreciable in incorporating all the stake holders of the college for the execution of education process, you achieved the targets and goals by following the holishc approach as a team effort i believe that was the main factor for your success in every effort.


Thank you for your support and contribution wish you good luck and very happy retirement filled. With joy goodness and prosperity.



## வாழ்த்துச் செய்தி

ஜோண்குயின்டஸ்
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
மாகாணக்கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதியாக, கடமையாற்றி தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் மணிவிழா நாயகன் கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். கணித விஞ்ஞான ஆசிரியராகவும் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தில் திட்டமிடல் உதவியாளராகவும் பின்னர் வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியில் விரிவுரையாளராகவும் தொடர்ச்சியாக இணைப்பாளர் உபபீடாதிபதி பதவிகளையும் வகித்து 2019 ஆம் ஆண்டு பதவியுயர்வு பெற்று யாழ்ப்பாணம் கல்வியியற்கல்லூரியில் பீடாதிபதியாக நியமனம் பெற்றார். இவ்வாறு கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்றியதோடு மட்டுமன்றி பொதுச்சேவைகளிலும் சமயப்பணிகளிலும் ஈடுபட்டவராவார். இவ்வாறாக பல்வேறு சமூகப்பணிகளை திறம்பட ஆற்றுவோரை நாம் வாழ்த்துவோமாக.




## வாழ்த்துச் செய்தி

கலாநிதி மா. கருணாநிதி
பேராசிரியர் - ஓய்வுநிலை
கொழும்பு பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக இருந்து ஓய்வுபெறும் கலாநிதி சு.பரமானந்தம் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்விமுதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்புக்களுக்கான ஆராய்ச்சிகளை எனது மேற்பார்வையின் கீழ் மேற்கொண்டு ஆராய்ச்சித்துறையிலே தேர்ச்சி பெற்ற ஒருவராகத் திகழ்கின்றார்.

தமிழ் மொழிவழியே ஆசிரியர் வாண்மைவிருத்திக்கான கற்கைநெறியை வழங்கிவரும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் மத்தியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகள் முன்னுதாரணமாகத் திகழ்வதற்கு பரமானந்தம் அவர்கள் மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கியவர். கல்லூரியின் பீடாதிபதி பதவியிலிருந்து விலகுவதன் காரணமாக கல்விச்சேவை ஓய்வுபெறுவதில்லை. சிறந்த உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்துகொண்டு கல்விக்கான சேவையையும் வழங்குவதன் மூலம் கல்வி விருத்திக்கு உயரிய பங்களிப்பைச் செய்யவேண்டும். ஓய்வுக்காலம் மகிழ்சியாகவும் நன்மை பயப்பதாகவும் அமைய என உளமார்ந்த வாழ்த்துக்கள்.



## வாழ்த்துச் செய்தி

வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா
சிரேஸ்ட ஆலோசனைச் சபை உறுப்பினர்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் பணி நயப்பினையிட்டு மணிவிழா அமைப்பினரால் வெளியிடப்படும் "பரமானந்தம்" என்ற மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன்.

"தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (திருக்குறள் - 236)


என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு அமைய கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரிக்குப் பீடாதிபதியாக இருந்து மகத்தான கல்விப்பணியை ஆற்றியவர். கல்வியும் ஒழுக்கமும் ஆசிரியர்களுக்கு இரண்டு கண்களாகும். அவற்றினை வளர்த்தெடுத்து உயரிய சமூக விழுமியங்களும், நற்பண்புகளுமுடைய ஆசிரியர்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உருவாக்கி வருகின்றது. இதற்கு உரமூட்டிய பீடாதிபதியாக இருபத்திநான்கு மணி நேரமும் கல்லூரியிலே இருந்து அதன் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். கற்ற கல்வியால் தானும் உயர்ந்து எமது சமூகத்தையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியையும் உயர்த்திய மைக்கு நன்றிகளையும் தெரிவித்து மணிவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.



## மிகச் சிறந்த வழிகாட்டி

S.R. சத்தியேந்திரம் பிள்ளை
உபபீடாதிபதி -தொடருறு கல்வி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தனது அர்ப்பணிப்பு மிக்க சேவையால் ஒரு வரலாற்று நாயகனாக உயர்ந்து நிற்கிறார் கலாநிதி சு. பரமானந்தம் அவர்கள். கொரோனா பேராபத்து காலத்தில் இக் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள், தேசிய ரீதியில் எல்லாக் கல்லூரிகளுக்கும் முன்மாதிரியாக மிகச்சிறப்பாக நடைபெற்றதாக கல்வி அமைச்சால் பாராட்டப்பட்டது. பீடாதிபதியின் சிறப்பான வழிகாட்டல்களும் இதற்குக் காரணமாக அமைந்திருந்தது.2023 ஆம் ஆண்டு சர்வதேச தரம் வாய்ந்த ஆய்வு மாநாட்டை இக் கல்லூரியில் சிறப்பாக நடத்தியிருந்தார். அவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## வாழ்த்துச் செய்தி

அருணாசலம் குகன்
உப பீடாதிபதி நிறுவன அபிவிருத்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சிக்கும் தரமான கல்விக்கும் வலுவான அடித்தளமொன்றையிட்டு கல்லூரியின் பீடாதிபதியாகக் கடமையாற்றிய கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் அகவை அறுபதில் பணிநயப்பு வாழ்த்து வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். எளிமையான தோற்றம், கம்பீரமான நடை, பொறுப்புணர்ச்சி, நேரம் தவறாமை, அன்பான ஆக்கபூர்வமான வார்த்தைப் பிரயோகங்கள், ஆசிரிய மாணவர்களிடத்தே காட்டும் கருணை, விரிவுரையாளர்களுடனான நட்புறவு என்பன அவரிடம் காணப்படும் நற்பண்புகளில் சிலவாகும். பன்துறை ஆளுமைமிக்க கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் காலத்தின் கட்டாயத்தால் சேவையை நிறைவுசெய்தாலும் அவரின் ஓய்வுகாலம் சீருடனும் சிறப்புடனும் அமையவும் அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விக்கும் சமூகத்திற்கும் பணி செய்யவும் எல்லாம் வல்ல வித்தக விநாயகரையும் முடிமன்னர் வைரவரையும் பிரார்த்திக்கின்றேன்.




- பிறப்பு - 15.01.1964
- தாய் தந்தை - சுப்பிரமணியம் சரஸ்வதி
- மனைவி - ஸ்ரீமதி மாலதி சுப்பிரமணியம்
- பிள்ளைகள் - ப.நிந்துகேசன் (மென்பொருள் பொறியியலாளர்)
  ப. சாருகேசன் (NIBM தகவல் முறைமையில் பட்டப்படிப்பு மாணவன்)
  ப. நிகேசன் (யாழ் இந்துக் கல்லூரி விஞ்ஞானப் பிரிவு மாணவன்)
- ஆரம்பக்கல்வி : முதலியார்குளம் றோ.க.பாடசாலை
- கனிஷ்ட இடைநிலை கல்வி : செட்டிகுளம் மகாவித்தியாலயம்
- சிரேஷ்ட இடை நிலைக்கல்வி : வவுனியா மகாவித்தியாலயம்
- உயர் கல்வி :
  - படவரைஞர் சான்றிதழ் முறைசாரா கல்விப் பிரிவு.
  - பயிற்றப்பட்ட கணிதம் - பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை.
  - கலைமாணி - பேராதனைப் பல்கலைக்கழகம்.
  - பட்டப்பின் கல்வி டிப்புளோமா, PGDEM தேசிய கல்வி நிறுவகம்.
  - Cert of Intel Teach ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் UK.
  - விஞ்ஞான முதுகல்விமாணி வட அயர்லாந்து அல்ஸ்ரார் பல்கலைக்கழகம் UK.
  - கல்வியியலில் கலாநிதிப் பட்டம் கொழும்பு பல்கலைக்கழகம்
- ஆசிரிய பணி
  1. வ / அல்காமியா முஸ்லீம் வித்தியாலயம்
  2. வ / இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை
  3. வ / செட்டிகுளம் மகாவித்தியாலயம்
- திட்டமிடல் உதவியாளர் -
  1. வ / செட்டிகுளம் கோட்டக்கல்வி அலுவலகம்
  2. வ/ தெற்கு கல்வி வலயம்
- விரிவுரையாளர் , விரிவுரை இணைப்பாளர், உப பீடாதிபதி - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
- பீடாதிபதி : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



## வாழ்த்துச் செய்தி

க.பேர்ணாட்,
ஓய்வுநிலை பீடாதிபதி, வவுனியா.

பார்க்கும் முகங்களில் எப்போதும் ஆனந்தம் முகம் பரம ஆனந்தம், நான் பலருக்கு நண்பனாக இருக்கின்றேன் ஆனால் எனக்கு இருவரே நண்பர்களாக இருக்கின்றனர். அவர்களில் பரம ஆனந்தம் முதன்மையானவர். என்னுடைய வயதுக்கு அவரை சமவயது நண்பராக சொல்ல முடியாது. ஆனால் அவரது உறவினர். உணர்வினால் அவரை நண்பராக கருகின்றேன். எனது பணிவாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் பல வழிகளில் அவரை நான் கண்டு ஆனந்தம் அடைந்திருக்கின்றேன்.பணிவாழ்வில் உடன் உதவியாளராக, திறன்மிகு தொழில் நுட்பவியலாளராக, நல்லாசிரியராக, ஆளுமைமிக்க நிர்வாகியாக, ஒழுக்கம் கட்டுபாடு உடையவராக, நல்லஆலோசகராக, மேலிடத்தலைமைகளுக்கு மதிப்பளிப்பவராக, சகபாடிகளுக்கும் உதவியும், ஆலோசனையும் வழங்குபவராக கனிவும் கட்டுப்பாடும் உடையவராக கருத்தாளம் மிகுசிந்தனையாளராக, ஊக்குவிப்பாளராக இவ்வாறு பல பாத்திரங்களாக கண்டிருக்கின்றேன் ஆனந்தம். வயதினால் "பரம்" உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெறுகிறார். ஆனால் அவரது சிந்தனைகளும் சுறுசுறுப்பும் தோற்றமும் ஓய்வுபெறும் எல்லையாக அமையவில்லை. அவரது இக்கல்விப்பணி என்றும் தொடரவேண்டும். கல்வி உலகம் அவரைப் பயன்படுத்த வேண்டும். மணிவிழாவைத் தொடர்ந்து அவர் வைரவிழா, பவளவிழா, நூற்றாண்டுவிழா காணவேண்டும் அவரும் அவரது குடும்பமும் அவரது உழைப்பிற்கேற்ப நல்லாசி பெற்றவர்களாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



## வாழ்த்துச் செய்தி

இரா.அருள்நேசன்,
பதிவாளர்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன். ஒரு பொருள் கிடைக்கும் போது அல்லது கிடைக்க இருக்கும் போது அதன் அருமை தெரியாது. அப்பொருள் தொலையும் போது கிட்ட இல்லாத போது தான் அது எவ்வளவு முக்கியமாகும் என்பது புலனாவது போலவே ஒருவருடைய அரச சேவையின் போதலும், சேவையும் அமையும். இவ்விடத்திற்கு ஒப்பாகவே எம் பீடாதிபதியின் சேவையும் உள்ளது. மணிவிழா என்பது அறுபதாவது அகவைவிழா அதனை சஷ்டியப்த பூர்த்தி அல்லது மணிவிழா என அழைக்கின்றனர். அந்த வகையில் மணிவிழா காணும் எங்கள் நாயகனுக்கு எமது கல்லூரிச் சமூகம் சிறப்பான மணிவிழாவை எடுத்துள்ளது. அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.எங்கள் கல்லூரியின் சொத்தாக மாண்புமிகு அரசருக்கு மணிவிழா சிறப்பாக அமையவும் ஓய்வுக்கால வாழ்கை சிறப்பாகவும் இருக்க என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். சேவையிலும் ஓர் எல்லையுண்டு அறுபது வயதிற்கு மேல் சேவை செய்ய முடியாது. அதுவே மணிவிழாவாக சிறப்பிக்கின்றது. இருப்பினும் இவரது சேவை அளப்பெரியது. தன் குணத்தினால் எல்லோரையும் வசீகரப்படுத்தி தனது சேவையின் இலக்கை அடைய வழி சமைத்தார். சிறந்தவர், வல்லவர். ஆண் [illegible]



## ஆரவாரமற்ற செயற்திறனாளர்

முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்
ஸ்தாபகப் பீடாதிபதி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் மணிவிழா நாளில் அவரை வாழ்த்தி சில வார்த்தைகள் கூறுவதில் பெருமகிழ்ச்சிகொள்கின்றேன். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளின் முற்பகுதியிலிருந்து அவருடனான உறவு எனக்குள்ளது. அவரை ஆசிரியராக, பலாலி ஆசிரியர் கலாசாலைப் பயிலுனராக, கல்விஅபிவிருத்தி உத்தியோகத்தராக, பட்டதாரியாக, விரிவுரையாளராக, உபபீடாதிபதயாக பீடாதிபதியாக என்ற பல நிலைகளில் அவரைக் கண்டு மகிழ்ந்துள்ளேன். அவரை ஆரவாரமில்லாத செயற்றிறனாளராக நான் மதிப்பிடுவதுண்டு. இக் கருத்து அவரை அறிந்து வேறு பலரிடமும் இருந்துள்ளதையும் நானறிவேன். இத்தகு தனித்திறமைகள் கொண்டவர் எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பீடாதிபதியாக நியமனம் பெற்ற போது மிக்க மகிழ்ச்சி கொண்டேன்.அவர் இளைப்பாறினாலும் அந்தத் திறனைத் தொடர்ந்து எமது சமூகத்துக்கு வழங்குவார் என்று நம்புகின்றேன். அதற்கு எல்லாம் வல்ல வித்தக விநாயகரும், நல்லூர் முருகப்பெருமானும் அவருக்கு நல்லாரோக்கிய வாழ்வு வழங்கப் பிரார்த்திக்கின்றேன்.



## வாழ்த்துச் செய்தி

S.K. யோகநாதன்
ஓய்வு நிலைப் பீடாதிபதி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியாக இருந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நான்காவது பீடாதிபதியாகப் பொறுப்பேற்று அர்ப்பணிப்பான சேவையை ஆற்றியவர். அவருடைய காலத்தில் கல்லூரியை நடத்துவதில் மிகப்பெரும் சவால்களை எதிர்கொண்டார். கொரோனா பெரும் தொற்று நோய் மற்றும் சிகிச்சை நிலையமாக கல்லூரி மாற்றப்பட்டமை. அடுத்து இலங்கை வரலாற்றில் கண்டிராத மாபெரும் பொருளாதார நெருக்கடி இவ் இரு பிரச்சினைகளையும் சவால்களாக ஏற்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கல்விசார், கல்விசாரா ஊழியர்களை அணிசேர்த்து அவர்களின் உதவியுடன் கல்வியமைச்சின் வழிகாட்டலில் இன்று வரை கல்லூரியைச் சிறப்பாக நடத்திவருகின்றார். அதற்காக முதற்கண் எனது பாராட்டுக்களை அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை"



## வாழ்த்துச் செய்தி

திரு.ச. அமிர்தலிங்கம்
ஓய்வுநிலைப் பீடாதிபதி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்று மணிவிழாக் காணும் உயர்திரு. கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மிக மன மகிழ்வு கொள்கிறேன். ஆசிரியராக தனது கல்விப் பணியை ஆரம்பித்த இவர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிரையாளராக ஆசிரிய கல்விச் செயற்பாடுகளை தொடர்ந்து படிப்படியாக சிரேஸ்ட விரிவுரையாளர், உப பீடாதிபதி எனப் பல பதவி உயர்வுகளைப் பெற்று, பின் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக பதவி உயர்வு பெற்றதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக தனது கல்வித் தகைமையையும் உயர்த்திய கல்விமான் ஆவார். இன்று மணிவிழாக் காணும் நண்பனும் பீடாதிபதியுமாகிய கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் ஓய்வுகாலத்தில் நீண்ட ஆரோக்கியத்துடனும் சீரும்சிறப்புடனும் தனது குடும்பத்தினருடன் வாழ்வதுடன் தொடர்ந்து சமூகத்திற்கு கல்விச் சேவையை தொடர எல்லாம் வல்ல முடிமன்னர் வைரவரும் வித்தக விநாயகரும் அருள்பாலிக்கவேண்டும்.



## வாழ்த்துச் செய்தி

திரு.ஜெயகாண்டீபன்
மணிவிழாக் குழுத் தலைவர்,
உபபீடாதிபதி, நிதி நிர்வாகம்.

இரண்டாயிரத்தொன்று மாசிமாதம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியின் அலுவலகம் புதிதாக ஆசிரிய கல்வியியலாளர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட கணினி சார் பணிகளை தன்னுடைய பணி சார் வல்லமையினால் இலாவகமாக நிறைவேற்றினார். கல்லூரியின் "பிரதிமை" முதற்கொண்டு "வித்தியாதீபம்" வரை பரமானந்தம் தனது முத்திரையை பதித்தார். "பரீட்சை" என்றால் பரமானந்தம் "புதிய மாணவர்கள் அனுமதி" என்றால் பரமானந்தம் "கடமை நேரத்திற்கு அப்பால் இரவு நேரம் வரை சேவை" என்றால் பரமானந்தம் எனப்பலபணிகளிலும் "உண்மையான ஆனந்தம்" கண்டார். பதவிகளை நாம் தேடக்கூடாது அவை நம்மை தானாக தேடிவரவேண்டும் என்ற தாரக மந்திரத்தை தன்னுள்ளே விதைத்ததனால் அவருக்கு விரிவுரை இணைப்பாளர், உபபீடாதிபதி போன்ற பதவிகள் தானாகவே கிடைத்தன. ஒருபிள்ளைதானும் அனுமதியின்றி இருக்கக் கூடாது என புதிய அனுமதியில் கிடைத்த "கோட்டாவை" நிரப்புவதற்கும் எந்தப்பிள்ளையும் நியாயமின்றி சித்தியடையாதிருப்பதை தவிர்க்கவும் கண்விழித்த இரவுகள் உடனிருந்தவன் என்ற வகையில் நான் நன்கு அறிவேன். அந்த ஏழைப்பிள்ளைகளின் "போற்றுதல்" ஆசீர்வாதம்" அவருக்கு கிடைத்த இறையருளாக நான் காண்கிறேன். பிள்ளைகள் பால் எப்பொழுதும் சிந்திக்கும் மென்திறனின் ஆற்றல் தான் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம் என்பது எனது கருத்து. மணிவிழாக்காணும் பரமானந்தம் என்றும் ஆனந்தத்துடன் அவரது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.



## வாழ்த்துச் செய்தி

த.தவனேசன்
உபபீடாதிபதி கல்வியும் தர உறுதிப்பாடும்

கல்வியியற்றுறையில், ஆசிரியத்துவம் என்பது கற்பித்தலிலும், ஆய்வு நிலையிலும் நீட்சியையும் அகல்விரிவையும் கொண்டது. நீட்சி என்பது ஆய்வையும் கற்பித்தற் செறிவையும் தொடர்ச்சியாகப் பண்பு நிலையில் மேலுயர்த்திச் செல்லல் எனலாம். அகற்சி என்பது அறிவை மற்றைய அறிவுப் புலங்களோடு தொடர்புபடுத்தி வலுவூட்டிச் செல்லல் ஆகும். யாழ்ப்பாணம் தேசியகல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் எமது கல்லூரியானது நீள்நிலை, அகல்நிலை என்ற இருபரிமாணங்களோடும் உறவாடி, ஆசிரிய வாண்மைத்துவத்திற்கு வலுவூட்டி வரும் அவரது ஆற்றல் நிலைத்து நிற்கும் செறிவு கொண்டது. தனது குடும்பத்தினருடன் நிறைவாக எல்லா நலன்களையும் பெற என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## மாற்றங்களை வரவேற்கும் மாமனிதர்

தலைவர்,
கல்வியியலாளர் கழகம்

பேசுதற்கு இனியர், மனப்பாங்கில் நேரியர், அனைவரின் அன்பர், அறிவுத்தேடல், ஆன்மீக முதிர்ச்சி, அதன் வழி உயர்வு கண்ட உயர் நடத்தைப்பாங்குடைய உன்னதமான ஆளுமையே எமது பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் கல்லூரி எனும் பெருவிருட்சத்தில் வெற்றி கண்ட சாவல்களை சந்தர்ப்பங்களாக்கிய நல் முத்தான இவரது ஓய்வுகாலம் சமூகப்பணிகளால் நிறைவுறவும், இல்லறம் செழித்து இனிய கனிகளாகக் வளம் பெற்று நிறைவு பெறவும் கல்வியியலாளர் கழகமாக வித்தக விநாயகரை வேண்டி ஆசிக்கின்றோம்.

விழா சிற்புற வாழ்த்துவோர்

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் தெற்கு சனசமூகநிலையத்தின் பவள விழாவை முன்னிட்டு மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் மாபெரும் திறனாய்வுப் போட்டி - 2024

கட்டமைக்கப்பட்ட பிரிவுகளுக்குட்பட்ட மாணவர்களின் பொது அறிவு, நுண்ணறிவு மற்றும் தமிழ். ஆங்கில மொழியறிவுகளைப் பரீட்சிக்கும் வகையிலான யாழ். மாவட்ட ரீதியாக இடம்பெறும் மாபெரும் திறனாய்வுப் போட்டியாக இது இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் வசிக்கும்/ கல்விகற்கும் தை மாதம் 31ம் திகதிக்கு முன்பாக குறிப்பிட்ட தரங்களில் பயிலும் மாணவர்கள் பங்குபற்ற முடியும். ஐந்து பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படும். எழுத்துப் பரீட்சையாக இது இடம்பெறும். கீழ் வழங்கப்படும் விண்ணப்பப்படிவ மாதிரியை சுயமாக தயாரித்து. போட்டி நடைபெறும் தினத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மாணவர்களின் விபரங்கள் பாடசாலை அதிபர்/ கிராமசேவையாளர்/ சமாதான நீதிவான்/ சனசமூக நிலைய நிர்வாகிகள் என்பவர்களில் யாதேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**இடம்: நல்லூர் தெற்கு, விக்கினேஸ்வரா வித்தியாலயம்.**

**காலம்: 20.01.2024 சனிக்கிழமை**

**காலை 09.00 மணி முதல் 10.30 மணி வரை**

**(1மணித்தியாலம் 30 நிமிடங்கள்)**

**பிரிவு 01 - தரம் 04 மற்றும் தரம் 05**
**பிரிவு 02- தரம் 06 மற்றும் தரம் 07**
**பிரிவு 03- தரம் 08 மற்றும் தரம் 09**
**பிரிவு 04- தரம் 10 மற்றும் தரம் 11**
**பிரிவு 05- உயர்தரம்**

**விண்ணப்பப்படிவம்**

மாணவர் முழுப்பெயர்.............
வதிவிட முகவரி....................
பிரதேச செயலாளர் பிரிவு..........
கல்வி கற்கும் தரம்..................
கல்வி கற்கும் பாடசாலை............
தொலைபேசி இல.....................

**விண்ணப்பதாரியை உறுதிப்படுத்தல்**

செல்வன்/ செல்வி...........பெயரை உடைய மாணவன்/ மாணவி குறித்த பிரிவு........... போட்டியில் பங்குபற்றுவதற்குரிய தகைமையை கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி.........

கையொப்பம்..........
Rubber stamp

(CS 53504) S-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 12.10.1938

உதிர்வு 14.12.2023

தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் மாணிக்கர் தாமோதரம்பிள்ளை**

அன்பின் திருவுருவே - அப்பா
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டுகள் ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள் என்றென்றும்
நம்மை விட்டு நீங்காது

தாவடி வடக்கு, கொக்குவில். (CS 53508) S-1 குடும்பத்தினர்.

## பொங்கல் திருவிழா

'விதையனைத்தும் விருட்சமே' குழுமத்தின் ஏற்பாட்டில் மாபெரும் பொங்கல் திருவிழா யாழ்ப்பாணம், கோட்டை பண்ணைச் சுற்றுவட்டத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சிறுவர்களை மகிழ்விக்கும் பல்வேறு கண்கவர் விளையாட்டுகள் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ச-66)

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## சேர்க்கை இல-01 (ADDENDUM NO-01)

யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக்கடைகள் Stage 1,2,3 கல்வியங்காடு. குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்காக 2024.01.04 (வியாழக்கிழமை) ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விலை மனுக்கோரல் விளம்பரம் அட்டவணையில் திருத்தம்


| தொ. இல | அமைவிடம் | தரைப் பிரதேசம் (சதுர அடி) | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் (வரி நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 03. 04 | செங்குந்தா சந்தைக் கடை Stage 1 (883sq.ft) கீழ் தளம் மற்றும் State 1,2,3 (2329sq.ft) மேற்தளம் மண்டபம் கடை இலக்கம் 01 ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. | 3212 aq.ft | 285,000.00 | 22,800.000.00 |
| 05 | செங்குந்தா சந்தைக் கடை Stage 2 கீழ் தளம் கடை இலக்கம் 09 (இக்கடை கேள்விகோரலில் இருந்து நீக்கப்படுகின்றத) | 124 aq.ft | 13,500.00 | 1,080,000.00 |

ஏனைய தரவுகள் 04.01.2024 திகதிய பத்திரிகையில் வெளியாகிய கேள்வி கோரலிற்கமைய எவ்வித மாற்றமுமின்றி வலுவிலிருக்கும்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(CR 41528)A-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 26 • 12 • 1930

ஆண்டவன் அடியில் 14 • 12 • 2023

அமரர்

**தம்பையா அருள்நேசன் தம்பித்துரை**

**(அறங்காவலர் யாழ். பஸ்நிலையம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்)**

கடந்த 14.12.2023 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் தம்பையா அருள்நேசன் தம்பித்துரை அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (13.01.2024) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மற்றும் இணையவழி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உறவுகள், நண்பர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல.693,**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS 53799)A-1

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 31 • 03 • 1943

மறைவு 24 • 12 • 2022

**அமரர் பொன்னுத்துரை சறோஜினி**

**திதி: 13.01.2024**

ஆண்டொன்று ஆனதம்மா மீளவில்லை உங்கள் பிரிவுத்துயர்
அன்பாலும் பண்பாலும் எமை அரவணைத்த அன்புத்
- தெய்வமே!
ஆற்றுவார் இன்றி தவிக்கின்றோம் உம் பிள்ளைகள் நாம்
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உருவமாய் இல்லை
- என்ற போதும்
தெய்வமாய் எங்களுடனே வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன இறைஞ்சுகின்றோம்.

**பாகுதேவன்புலம்,**
**வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு, கொக்குவில்.**

(CS.53408) (N.1)

**உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் கராத்தே பயிற்சி



யாழ்ப்பாணம், ஜன. 13

லண்டனில் வதியும் கராத்தே மாஸ்டர் சிகான் எஸ்.கணேசலிங்கம் பங்குபற்றிய விசேட கராத்தே பயிற்சிப் பாசறை பருத்தித்துறையில் இடம்பெற்றது.

பருத்தித்துறையிலுள்ள ஞானாலயம் யோகா மற்றும் கராத்தே பயிற்சி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இதில் ஞானாலயம் யோகா மற்றும் கராத்தே பயிற்சி நிலைய ஆசிரியர் மா.இரத்தினசோதி ஆசானிடம் கராத்தே பயின்று வரும் 20 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட கராத்தே பயிற்சியுடன் கூடிய ஆலோசனைகள் வழங்கப் பட்டன. (ச-100)

# பதவி உயர்வு



யாழ்ப்பாணம், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபராக சுப்பிரமணிய வேல் பிரகலாதன் பதவியுயர்வு பெற்றுள்ளார். இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பிரபல விஞ்ஞானபாட ஆசிரியராவார். (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

13.01.2024



தோற்றம் 25.07.1935 — மறைவு 13.01.2023

### அமரர் பர்னாந்து ஜோசெப் அன்ரனி

(ஓய்வுபெற்ற அதிபர், சட்டத்தரணி, பதில்நீதவான், பிரசித்த நொத்தாரிஸ் (JPUM) (அன்ரனி மாஸ்ரர்)

ஆண்டொன்று சென்றால்
ஆறுதல் இல்லை எங்கள் மனதில் - அப்பா
அனைத்திற்கும் அத்திவாரமாய் இருந்தீரே
அன்பென்னும் ஊற்றினுள்
எம்மை எல்லாம் ஆளாக்கிய தந்தையே
இன்று நீங்கள் இறைவனடி
சேர்ந்தது போலிருக்கிறதுவே
ஈறு ஆறு மாதமும் சென்றதுவே
உள்ளமெல்லாம் ஊற்றெடுக்கிறது கண்ணீரே
ஏட்டுக் கல்வியை ஏற்றமுடனே தந்து
ஏணி போல் ஏற்றம் தந்த
எம் தந்தையே எங்கே சென்றீர்கள்?
எம்மால் முடியவில்லை
ஏதென்றும் புரியவில்லை
உங்கள் அருகாமை இல்லாமலே



என்றும் உங்கள் நினைவுகளுடன்...
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.44, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

077 979 2463, 076 2618 912, 077 5135 315

## நெஞ்சை விட்டகலாத 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி இந்திராணி கதிர்காமத்தம்பி

திதி: மார்கழி வளர்பிறை திருதியை (13.01.2024)



அன்பின் ஊற்றாய் பண்பின்
உறைவிடமாய்
ஆதரவு காட்டிய எங்கள்
குலவிளக்கே
எங்கள் உள்ளங்களில்
நிலையாகவே தங்கி
விட்டீர்கள்
ஆண்டவன் அடியில்
அமைதிபெறப்
பிரார்த்திக்கின்றோம்.

அம்மன் கோவில் வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்

(cs.53472) (N.1)

## மரண அறிவித்தல்

### செல்வி வல்லிபுரம் பரமேஸ்வரி

(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)



வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வல்லிபுரம் பரமேஸ்வரி 12.01.2024 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூவுலக வாழ்வை நிறுத்திக் கொண்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் பானுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அன்னபப்பிள்ளை, நவரத்தினம், நாகேந்திரம் பாக்கியலீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கார்த்திகேசு, வினோராணி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.01.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் எறியால்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கா.ஸ்ரீமோகன் (பெறாமகன்)
077 2487102
வ.நவரத்தினம் (சகோதரன்)
0771278149

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### குலசிங்கம் சவுந்தரநாயகி

தோற்றம் 08.03.1936 — மறைவு 12.01.2024



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் சவுந்தரநாயகி நேற்று (12.01.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா தையல்நாயகி, சரவணமுத்து வள்ளிநாயகி, செல்லத்துரை சபாபதிப்பிள்ளை (மிருகவைத்தியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா சிவபாக்கியம், முருகேசு பத்மநாதன் முருகேசு திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற முருகேசு குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் குலசிங்கம் சோமராஜ் அவர்களின் பாசமிகு தாயாரும், ஜெயந்தாவின் அன்பு மாமியாரும், நிலோத்மனின் (துளசி) அன்பு அப்பம்மாவும், ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 09.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியகாரன் வீதி,
வட்டுதென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
சோமராஜ் (கண்ணன்)
மகன் 077 374 7828

(CR 41536) S-1

## மோசடியில் அகப்படாதீர்கள்

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, டச்சுவீதி, **GPS Lane** அருகாமையில் 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப் பட்ட நிலையில் விற்பனைக்குள்ளது என பத்திரிக்கைகளில் கடந்த சில நாட்களாக வந்த விளம்பரம் மோசடியாக செய்யப்பட்ட விளம்பரமாகும். குறித்த ஆதனம் தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மீளாய்வு/128/23 எனும் வழக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் காணி/1320/ 2024 எனும் வழக்கு நிலுவையில் உள்ளன. இக்காணியை விற்க முயல்வோருக்கு குறித்த காணியில் எவ்வித உரித்தும் இல்லை என்பதனை உரிமையாளர்கள் அறியத்தரு கின்றனர்.

குறித்த மோசடி விற்பனையில் பங்குபற்றி காணி கொள் வனவு செய்வோருக்கெதிராகத் தலா 1 கோடி நட்டம் கோரி காணி உரிமையாளர்களால் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு: 075 325 4124
074 136 4103**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறைக்கு சட்டத்தரணிகள் சங்கம்!

யாழ்., ஜன. 13

ஊர்காவற்றுறை சட்டத்தரணிகள் சங்கம் கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்ற கட்டடத்தில் மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உபதலைவர் யாழ்.வலய சிரேஷ்ட சட்டத்தரணி பா.தவபாலன் தலைமையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. அதன்படி ஊர்காவற்றுறை சட்டதரணிகள் சங்கத் தலைவராக திருமதி சறோஜினி இளங்கோவன், உபதலைவராக அருட்பிரகாசம் நிரோசன், செயலாளராக திருமதி பத்மதனுசன் சாளினி, உப செயலாளராக அம்பிகை பாலன் சிறீராகவன், பொருளாளராக திருமதி தினேஷ் கிறிஸ்ரபிலினா உள்ளடங்கலாக ஆறு நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-125)

## ஆண்டு நிறைவு கொண்டாட்டம்

கச்சாய் வினோபா முன்பள்ளியின் ஆண்டு நிறைவு விழா கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது பிரதம விருந்தினராக கச்சாய் மகா வித்தியாலய அதிபர் ஐ.தேவராஜன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர்களான திருமதி செ.பத்மநாதன் மற்றும் கா.கந்தசாமி உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது, மாணவர்களின் கலை நிகழ்வுகள் பல இடம்பெற்றன. மாணவர்கள்நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஓ-159)


### விற்பனைக்கு

முதிரையில் செய்யப்பட்ட சோகேஸ் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 255 0807

### முகாமையாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு கணினி அறிவுள்ள முகாமையாளர்கள் (managers) இருவர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

சுமார் 60,000 ரூபா சம்பளமாக

075 592 5371
076 760 0403

### வாகனம் விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் சொந்த பாவனையில் உள்ள 2016 இல் உற்பத்தி செய்யப்பட்ட NP DAD XXXX இலக்கமுடைய நீல நிறமான ACE EX2 வகை வாட்டா வாகனம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:
076 980 7634, 077 7495 956


### 3ஆம் ஆண்டு நினைவுதினம்

மலர்வு 29 . 10 . 1933



உதிர்வு 16 . 12 . 2020

**அமரர் திருமதி நாகம்மா குலசேகரம்பிள்ளை**

திதி:துதியை
(13.01.2024) சனிக்கிழமை

பழமுதிர்சோலை என்னும் எழுதூரினிலே
நவரத்தினங்களை பெற்றெடுத்த
நாகம்மா எனும் நாமம் கொண்டீர்
புகழுடையான் குலசேகரம்பிள்ளை
தன்னைப் பற்றிக் கொண்டீர்
சிரிப்பால், குணத்தால், அன்பால்
உமை வெல்ல ஒருவரில்லை எம் ஊரில்
உம் சந்ததி வேரூன்றி பெருவிருட்சமாய்
ஓங்கி உயர்ந்து நின்றும்
நீவீர் இல்லையம்மாஎங்கள் தங்கம்
அம்மா அம்மம்மா.
மார்கழியாம் மாதம் தன்னில்
பூர்வபக்க துதியையில்
சென்றீர் இப்பூவுலகைவிட்டு
மூன்றாண்டுகள் சென்றது
காற்றாய் பறந்தது - ஆனாலும்
உங்கள் குரல் ஒலிக்கின்றது,
சிரிப்பு கேட்கின்றது.


பழமுதிர் சோலை,
நாகர்கோவில் வீதி,
எழுதுமட்டுவாழ்.

என்றென்றும் உமை மறவா...
குடும்பத்தினர்.

(CS 27632) A-1

### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 08 . 1948



உதிர்வு 04 . 01 . 2022

**அமரர் கலாநிதி வேலுப்பிள்ளையுகபாலசிங்கம்**

ஆண்டு இரண்டு உருண்டு போயினும் உற்றதேகம் தனை உயிர் மறந்து போயினும் தந்தையே உங்கள் நினைவு அழியாது என்றும் நம்மை விட்டு ஊர் போற்றிடும் உங்கள் குணமும் கல்வி சமூகத்திற்கு ஆற்றிய தொண்டும் காலம் பல கடந்தாலும் எல்லோர் மனதிலும் நின்று வாழும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 53506) S-1


### நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எம் இனிய உறவுகளுக்கு இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

எம்மிடம் எல்லா இனத்தவர்களுக்கும் எல்லா மதத்தினருக்கும் அரசாங்க உத்தியோகம், உத்தியோகம் அல்லாதது, உள்நாடு வெளிநாடு, செவ்வாய் குற்றம் உள்ளது, இல்லாதது, சூரிய செவ். சகலருக்கும் பொருத்தமான மணமகன்கள், மணமகள்கள் ஏராளம் உண்டு. உங்களுக்கு பொருத்தமான வரன்களை எம்மால் விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: வீ.ஜெயந்தி
077 9733 183

(CS 27578) A-1

### பெண் அலுவலக உத்தியோகத்தர் தேவை

யாழ். பல்கலைக்கழகம் அருகில் அமைந்திருக்கும் அலுவலகத்தில் கடமையாற்ற பெண் உதவியாளர் தேவை. முன் அனுபவம் தேவையில்லை பயிற்சி வழங்கப்படும்.

சுய விபரக்கோவையை 076 220 6863 என்ற Whatsapp இலக்கத்திற்கு அனுப்பவும்.

மாதாந்த சம்பளம்: 40,000/- வழங்கப்படும்.

(CS 27616) A-1


### பெயர் மாற்றம்

வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டையில் வசிக்கும் **சின்னத்தம்பி பொன்னு** ஆகிய நான், எனது பெயரை **பாலசிங்கம் பொன்னம்மா** என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் **பாலசிங்கம் பொன்னம்மா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS 53505) S-1

பாலசிங்கம் பொன்னம்மா


### வாடகைக்கு

கடை, மாடி வீடு, விசாலமான களஞ்சியம், அரிசி ஆலை அமைப்பதற்குரிய இடம் ஆகியன வாடகைக்கு உண்டு. வலிகாமம் மேற்கு, பிரதேச சபைக்கு முன்பாக அமைந்துள்ளது.

தொடர்பு:
077 3366 485
Whatsapp - 074 208 7713

யாழ்ப்பாணம்,
மானிப்பாய் காரைநகர் வீதி, சுழிபுரம்.


### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**இராமலிங்கம் யோகராசா (யோகன்)**



பிறப்பு 20.07.1954 இறப்பு 05.01.2022

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு வழிகாட்டியாய்
எம்மை விட்டுப் பிரிந்து
ஈராண்டு நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது
உங்கள் நினைவுகள்.

குடும்பத்தினர்.


### பரியோவான் ஆலய பாலர் பாடசாலை
### பிரதான வீதி, சுண்டுக்குளி

பரியோவான் பாலர் பாடசாலைக்கு (Nursery School) பெண் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**தகைமை:**

Diploma அல்லது க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். Piano வாசிக்க தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது

**விண்ணப்ப முடிவு திகதி: 30.01.2024**

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**
குருவானவர்,
இல. 452 பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(CS 27646) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சியில்

# ஐந்து மாணவர்களுக்கு டெங்குத் தொற்றுறுதி!

யாழ்ப்பாணம், ஜன. 13

வடமராட்சியிலிருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய ஐந்து மாணவர்களுக்கு டெங்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்கள் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக டெங்குத் தொற்று தீவிரம் பெற்றுள்ளது. இவ்வாறிருக்கையில் டெங்குத் தொற்றுக்கு உட்பட்ட ஐந்து மாணவர்கள் பருத்தித்துறை ஆதாரமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஏனைய இரு மாணவர்களும் தீவிரமான மருத்துவக் கண்காணிப்பின் கீழ் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காய்ச்சல் அறிகுறி இருக்கும் மாணவர்கள் காலம் தாழ்த்தாது மருத்துவமனையில் சேர்க்கப்படவேண்டும் என்றும், இவ்வாறு மருத்துவமனைக்கு வரும் மாணவர்கள் சிறப்பு அனுமதிகளின் கீழ் உரிய முறையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய அத்தனை ஏற்பாடுகளும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் சார்பில் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-100)

# கஞ்சாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 13

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த இளைஞனை நிறுத்திச் சோதனையிட்டபோதே அவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 40 கிராம் 340 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டது. (ம-125)

## அரசாங்கம்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சிறப்புச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணயநிதியத்துடனான முதலாவது மீளாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்து தெரிவித்த சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் குழு, ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட சவாலான பொருளாதாரச் சீர்திருத்தங்களை வெகுவாகவே பாராட்டியது. அத்துடன், அடுத்தகட்ட கடன் வழங்குதல் தொடர்பிலும் அதற்கு இலங்கையால் வழங்கப்பட வேண்டிய உறுதிப்பாடுகள் மற்றும் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பிலும் விரைவாக ஆராயப்பட்டது.

வங்கிச் சட்டத்தில் திருத்தங்கள் மற்றும் வங்கித் துறையின் மறுமூலதனமாக்கல் உள்ளிட்ட நிதி விடயங்களில் துரித கவனம் செலுத்த வேண்டிய அவசியம் குறித்தும் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

ஆட்சிப் பொறிமுறையில் கவனம் செலுத்துதல், ஊழல் தடுப்பு ஆணைக்குழுவை அமுல்படுத்துதல், அதுதொடர்பான செயற்றிட்டங்களை வெளியிடுதல் மற்றும் அதன் ஆணையாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைப் புரிந்து கொள்வதற்காக அரசியலமைப்பு பேரவையுடனான சந்திப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களில் வெற்றியை அடைவதற்கு அரச ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, திறன் அபிவிருத்தியில் இலங்கையின் பங்களிப்பும் சர்வதேச நாணயநிதியத்தால் மதிப்பீடுசெய்யப்படவுள்ளது. அரசசேவையின் திறனை வளர்ப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கமைய, இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் வாரங்களில் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. (அ-ம-26)

## எரிபொருள்...

ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் நடத்திய அத்துமீறிய தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் பிணையக்கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலையடுத்து காஸாவில் ஹமாஸின் நிலைகளைக் குறிவைத்து பதிலடி கொடுத்து வருகின்றது இஸ்ரேல். ஆனால், ஹமாஸ் போராளிகள் மட்டுமல்லாமல் அப்பாவிப் பொதுமக்களும் கொத்துக்கொத்தாக இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்படுகின்றனர். இதுவரை 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

எந்தவொரு சர்வதேச அழுத்தத்துக்கும் கட்டுப்படாமல் தனது தாக்குதலை நாளுக்குநாள் இஸ்ரேல் தீவிரப்படுத்தி வருகின்றது. இஸ்ரேல், பலஸ்தீனர்கள் மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால், இஸ்ரேலுக்குச் செல்லும் கப்பல்களை இலக்குவைத்து தாக்குதல் நடத்துவோம் என்று அறிவித்த ஹவுத்திப் படையினர் தற்போது செங்கடலில் பயணிக்கும் அனைத்து சர்வதேசக் கப்பல்களையும் தாக்கி வருகின்றனர். இதனால், நேற்றுமுன்தினம் பிரிட்டன் மற்றும் அமெரிக்கப் படைகள் இணைந்து ஹவுத்தி அமைப்புக்கு எதிராகக் கடும் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளன. ஹவுத்தியும் பதிலடி கொடுப்பதற்குத் தயாராகியுள்ளது. ஆதலால், செங்கடலைத் தவிர்த்து தொலைதூர வழியாகவே இனிவரும் நாள்களில் எரிபொருள் கப்பல்கள் பயணப்பட உள்ளன. இதனால் காவுகைக் கட்டணங்கள் அதிகரிக்கவுள்ளன. அத்துடன் இந்த மோதலால் எண்ணெய் உற்பத்தியிலும் பாதிப்பு ஏற்படும் என்று கருதப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மட்டும் கச்சா எண்ணெய் பீப்பாயொன்று 3 டொலரிலிருந்து 4.5 டொலர் வரை விலையேற்றத்தைச் சந்தித்துள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச அளவில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கும். அதன் தாக்கம் இலங்கையிலும் எதிரொலிக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-ம)

## பயங்கரவாத...

இதுதொடர்பில் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வற் வரியை அதிகரித்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளையும் அரசாங்கம் அதிகரித்துள்ளது. இதனால், அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வீதிக்கு இறங்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இதனைத் தடுப்பதற்காகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு, நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு என்பன கொண்டு வரப்பட்டுள்ளன. உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல் நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு எதிர்வரும் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. நாட்டுமக்களின் உரிமைகளை அடக்கும் சட்டவரைவுகளைச் சமர்ப்பித்தே அரசாங்கம் புத்தாண்டை ஆரம்பித்துள்ளது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதலால்தான் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் அடிப்படைப் பேச்சுரிமைமற்றும்கருத்துச்சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கிறோம் - என்றார். (அ-ம)

## கசிப்புச்...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த தலைமையில் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

திருநெல்வேலி சந்தையில் செருப்புத் தைக்கும் தொழிலாளியாகப் பணியாற்றிய நபர் ஒருவர் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தபோது அவரைக் கைதுசெய்த பொலிஸார், அவரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது மேற்படி செருப்புத் தைப்பவர் பிறிதொரு இடத்திலிருந்து தொகையாக கசிப்பை வாங்கிவந்து விற்பனை செய்தது தெரியவந்தது. அவரை ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான விசாரணைகளின் அடிப்படையிலேயே ஏனைய மூவரும் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பெண். இவர்கள் 46, 27, 45 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-125-26)

## ஜெனிற்றாவுக்கு...

சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக அவர் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டத்துக்காகக் கடந்த 5ஆம் திகதி வவுனியாவுக்குச் சென்றபோது ரணிலின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி ஜெனிற்றாவும் பிறிதொரு பெண்ணும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது ஜெனிற்றா 7 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். மற்றைய பெண் அன்றையதினமே பிணையில் விடுவிக்கப்பட்டார். ஜெனிற்றா நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (அ-ம-110-18)

## 12 தமிழக...

பட்ட மேற்படி 12 தமிழக மீனவர்களுக்கும் எதிரான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. நேற்று வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது, சந்தேகநபர்களுக்கு எதிராக நீரியல் வளத்துறையால் மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அவற்றை மீனவர்கள் ஏற்றுக்கொண்டதையடுத்து மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா 6 மாதங்கள் என்ற அடிப்படையில் 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து, அதைப் பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்து விடுவிக்கப்பட்டனர். (அ-ம-100)

## எம்.பி.யானார்...

நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட சமிந்த விஜயசிறி பதவிவிலகியதையடுத்து, அந்த வெற்றிடத்துக்கு கடந்த தேர்தலில் விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த இடத்திலிருந்த நயன பிரியங்கர வாசலதிலக தெரிவாகியுள்ளார். (ச-44)

## முதியவரொருவர்...

மீட்கப்பட்டவராவார். சட்டமருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், தடயவியல் பொலிஸார் உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்குப் பயணம் மேற்கொண்டு சடலத்தைப் பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டனர்.

உயிரிழந்தவரின் மகன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கிய தகவலுக்கமைய சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## இந்திய...

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள் இவ்வாறு வடமராட்சிப் பகுதிக்கு அருகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக மீனவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-100)

## வினாத்தாள்...

இதனால் அந்தப் பரீட்சை இரத்து செய்யப்பட்டுவிட்டதாகவும், புதிய பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புகள் திருட்டு: மூவருக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 13

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வளாகத்தில் இரும்புத் திருட்டில் ஈடுபட்ட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புலனாய்வுத் தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், இரும்புத் திருட்டில் ஈடுபட்ட மூவரை கடந்தவார இறுதியில் கைது செய்திருந்தனர். அவர்கள் மூவரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதையடுத்து அனைவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-125)


## பெண் ஊழியர்கள் தேவை

யாழ்ப்பாணம், இருபாலையில் இயங்கிவரும் புத்தக மற்றும் போட்டோகொப்பி கடைக்கு அனுபவமுள்ள / அனுபவமற்ற பெண் ஊழியர்கள் தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 8323 682

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில் பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 077 4919

## வேலையாள் தேவை

SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனத்திற்கு (Computer operator) MS Office வேலை செய்யக்கூடிய வேலையாட்கள் தேவைப்படுவதால் வேலை தேடுவோர் எதிர்வரும் 16/17/18 ஆம் திகதிகளில் சுய விபரத்துடன் நேரில் வரவும்.

முகாமையாளர்,
SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனம்,
இல 154 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2991, 021 492 5838

(CS 53503) S-1

## அரியாலை சனசமூக நிலையம்

75th

1949-2024

### வடமாகாண ரீதியிலான உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ். உதைப்பந்தாட்ட லீக்கின் இனுமதியுடன் எமது நிலையத்தின் முன்னாள் தலைவர் **அமரர். S.K. சண்முகலிங்கம்** ஞாபகார்த்தமாக அன்னாரின் புத்திரி நோர்வே வாழ் **திருமதி.நேதாஜி தேன்மொழி** யின் அனுசரனையில் எமது நிலையம் நடாத்தும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.



1ம் இடம் - 250,000/=
2ம் இடம் - 150,000/=
3ம் இடம் - 75,000/=
4ம் இடம் - 25,000/=

விண்ணப்ப முடிவுத் திகதி:26.01.2024
அனுமதி கட்டணம்: ரூபா 1,000/=

(CS 53489) A-1

தொடர்புகளுக்கு:-
077 601 3550, 077 020 4134, 0777 193 483

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 02 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான
- வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389,077 986 5457


## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 10 . 1941



உதிர்வு 10 . 01 . 2024

### லிங்கோற்பவநாதர் தர்மாம்பிகை

(ஓய்வுநிலை ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

மயிலிட்டி தெற்கு. கட்டுவனை பிறப்பிடமாகவும் செம்மணி வீதி நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட லிங்கோற்பவநாதர் தர்மாம்பிகை அவர்கள் 10/01/2024 புதன்கிழமை அன்று இறைபாதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயதேசிகர் கமலாம்பிகையம்மாவின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரைக்குருக்கள் காமாட்சியம்மாவின் மருமகளும், லிங்கோற்பவநாதரின் அன்பு மனைவியும். சிவசங்கர் காலஞ்சென்ற ரவிசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும். காஸ்திரியின் அன்பு மாமியாரும் ரஷ்மி லஷ்வின் தர்ஷித் ஆகியோரின் அன்புபேத்தியும் ஞானாம்பிகை தவமணிதேவி புனிதவதி பாலச்சந்திரன் காலஞ்சென்ற கிருபாகரன் காலஞ்சென்ற இராமச்சந்திரன் காலஞ்சென்ற கௌரிதேவி ஞானாகரன் சிறீகாந்தன் உமாகாந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 14/01/2024 ஞாயிறுக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று காலை 11.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக் கிரிகைகளுக்காக எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
குடும்பத்தினர்

## காணி போலி வெளிப்படுத்தல் உறுதி மோசடி

இல.741, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லத்துரை தேவராஜா ஆகிய எனக்கு டச்சு வீதி, கல்வியங்காட்டில் உள்ள நிலப்பரப்பு 113 ஆதனமானது பரம்பரை வழி வந்த உரித்தும் ஆட்சியுமாகும். இதில் என்னால் விற்பனை செய்யப்பட்ட பகுதிகள் போக நிலப்பரப்பு 19 குளி 10 இனை எனது மகளிற்கு அற்றோனி தத்துவம் மூலம் நன்கொடை வழங்கியிருந்தேன்.

நான் இவ் ஆதனத்தை தங்கு தடையற்ற ஆட்சியிலும் கட்டுப்பாட்டிலும் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக வைத்துள்ளேன். எனது மகளது பெயரிலேயே கோப்பாய் பிரதேசசபையில் சோலைவரி பதிவுகள் காணப்படுகின்றன.

குறித்த ஆதனத்திற்கு அருகில் குடியிருக்கும் சில நபர்கள் மோசடியான முறையில் வெளிப்படுத்தல் உறுதிகளை நிறைவேற்றி கபடமான முறையில் அபகரிக்க முயற்சி எடுத்து வருகின்றார்கள். குறித்த வெளிப்படுத்தல் உறுதிகளில் கிராமசேவையாளர் பிரிவு கிராம சேவையாளர் பிரிவு J/260 என மோசடியான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் டச்சு வீதி, கல்வியங்காட்டில் உள்ள எனது ஆதனத்தினுடைய கிராம சேவையாளர் பிரிவு J/259 என்பதாகும். குறித்த நபர்கள் யாழ்ப்பாண நீதிமன்றில் PC/02/2023 எனும் வழக்கு தாக்கல் செய்து போது குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு எனது ஆட்சியும் உரித்தும் நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொய்யான விபரங்களை குறிப்பிட்டு செய்யப்படும் விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என பொதுமக்களினை கேட்டுக் கொள்கின்றேன். இவர்களுக்கு எதிராக 50 மில்லியன் நட்டஈடு கோரி என்னால் வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளது.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org